பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**02 03 2026** **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. பஹ்ரைன் மற்றும் சவுதி அரேபியாவில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அந்நாட்டு தலைவர்களை பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேற்குவங்க மாநில மக்கள், ஆட்சி மாற்றத்தை விரும்புவதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

3. கனடா பிரதமரின் இந்திய வருகை இரு நாடுகளுக்கிடையேயான நல்லுறவுகளில் முக்கிய திருப்பு முனையாக அமைந்துள்ளது என்று மத்திய அரசு கூறியுள்ளது.

4. ஜனநாயக பாரம்பரியத்தை பாதுகாப்பதில் இந்திய மக்களின் செயல்பாடுகளுக்கு ஐ.நா. மனித உரிமைகளுக்கான தூதர் திரு. Volker Turk பாராட்டு தெரிவித்துள்ளார்.

5. Dusseldorf சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டி இன்று தொடங்கியது.

- - இனி விரிவான செய்திகள் –

<<<<<<>>>>>>>

பஹ்ரைன் மற்றும் சவுதி அரேபியாவில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு அந்நாட்டு தலைவர்களை பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதள பதிவில், மேற்காசியாவின் நிலைமை குறித்து சவுதி அரேபிய பிரதமரும், பட்டத்து இளவரசருமான முகமது பின் சல்மானுடன் தொலைபேசியில் பேசியதாகவும், இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை மீறி அந்நாட்டின் மீதான தாக்குதலுக்கு இந்தியாவின் கண்டனத்தை தெரிவித்ததாகவும், குறிப்பிட்டுள்ளார்.

வெகு விரைவில் அந்த பகுதியில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை ஏற்படுவதற்கு தாங்கள் ஒப்புக் கொண்டதாகவும், கடினமான தருணத்தில் இந்திய சமூகத்தினரின் பாதுகாப்பை உறுதி செய்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டதாகவும் பிரதமர் அதில் கூறியுள்ளார்.

பஹ்ரைன் மன்னர் திரு Hamad Bin Isa Al Khalifa-வுடனும் தாம் தொடர்புகொண்டு பேசியதாகவும், அந்நாட்டின் மீதான தாக்குதலை தாம் கண்டித்ததாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

இந்த நேரத்தில் பஹ்ரைனுடன், இந்தியா ஒருங்கிணைந்து நிற்கும் என்றும், அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்திருப்பதற்காக திரு Hamad Bin Isa Al Khalifa-வுக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொண்டதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

இஸ்ரேல்-ஈரான் இடையேயான மோதலைத் தொடர்ந்து வளைகுடா நாடுகளில் வசிக்கும் இந்தியர்களை பாதுகாப்புடன் மீட்டு வருவது குறித்து மத்திய அரசு தீவிரமாக ஆலோசித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

இமாசலபிரதேச மாநிலம் காங்ராவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பல்வேறு நாடுகளிலும் உள்ள தூதரகங்கள் வாயிலாக இந்தியர்களை மீட்க ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக கூறினார்.

இதுபோன்ற ஒருங்கி◌ைணந்த உதவிகளை முந்தைய மத்திய அரசு மேற்கொள்ளவில்லை என்றும் திரு. கிரண் ரிஜிஜூ குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

மேற்கு வங்க மக்கள் தற்போது மாற்றத்தை விரும்புவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

தெற்கு 24 பர்கானாஸ் மாவட்டம் Raidighi என்ற இடத்தில் பிஜேபியின் பிரசார யாத்திரையை தொடங்கி வைத்து பேசிய அவர், மாநிலத்தில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் மோசமான ஆட்சியால் மக்கள் துயரத்தில் இருப்பதாக கூறினார்.

முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி, வாரிசு அரசியலை முன்னெடுத்துள்ளதாக குற்றம் சாட்டிய அமித்ஷா, அடுத்த முதலமைச்சராக அபிஷேக் பானர்ஜியை நியமிக்க முயற்சிப்பதாக குறிப்பிட்டார்.

மேற்கு வங்கத்தில் சட்ட விரோத குடியேற்றம் குறித்து ஏற்கனவே பிஜேபி கவலை தெரிவித்திருப்பதாகவும், ஊடுருவல்காரர்களை நாட்டிலிருந்து அப்புறப்படுத்த உறுதி பூண்டிருப்பதாகவும் திரு அமித்ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஆசிய கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் உறுப்பு நாடுகள் தங்களின் முதலீடுகளை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று அந்த வங்கியின் தலைவர் திரு Zou Jiayi-ஐ சந்தித்தபோது நிதியமைச்சர் இதனை தெரிவித்ததாக நிதியமைச்சகத்தின் சமூக வலைதள பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கும் ஆசிய கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கும் இடையேயான உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும், இந்திய உள்கட்டமைப்பு துறையில் அதிகரித்து வரும் சேவைகளை இணைந்து செயல்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் அப்போது நிதியமைச்சர் ஆலோசனை நடத்தியதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட்டின் அடிப்படையில் கட்டமைப்புக்கு முன்னிலை அளிக்கக்கூடிய வளர்ச்சியின் முக்கியத்துவத்தை திருமதி நிர்மலா சீதாராமன் எடுத்துரைத்ததாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

சமுதாயத்தில் தவிர்க்கமுடியாத சக்தியாக மகளிர் திகழ்வதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

தலைநகர் தில்லியில் மாநில அரசின் சார்பில் பெண்களுக்கான இலவச எரிவாயு சிலிண்டர் திட்டம் உள்ளிட்ட நான்கு திட்டங்களை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

நாகரிகம் அடைந்த ஒரு நாட்டின் உண்மையான அடையாளம் என்றால் அது மகளிருக்கு மரியாதையும் அதிகாரமும் அளிப்பதுதான் என்று அவர் கூறினார்.

பிரதமரின் இலவச எரிவாயு வழங்கும் திட்டம், பெண் குழந்தைகளை காப்போம், அவர்களுக்கு கற்பிப்போம் போன்ற திட்டங்களால் மகளிருக்கு அதிகாரமளிக்கும் வகையில் மத்திய அரசு செயல்படுவதாக அவர் தெரிவித்தார்.

தற்போது தில்லி அரசின் புதிய திட்டங்களால் தலைநகரில் மகளிர் நம்பிக்கையுடன் செயலாற்றி புதிய உச்சத்தை எட்டுவார்கள் என்று திருமதி திரௌபதி முர்மு நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

கனடா பிரதமர் திரு Mark Carney-ன் இந்திய வருகை இரு நாடுகளுக்கிடையேயான நல்லுறவுகளில் முக்கியமான திருப்பு முனையாக அமைந்துள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய கிழக்கு பகுதிக்கான வெளியுறவுத்துறை செயலாளர் திரு குமரன், கனடா பிரதமரின் வருகையால் இந்தியாவுக்கு குறிப்பிடத்தக்க அளவிலான வர்த்தகம் கிடைத்து இருப்பதாக கூறினார்.

பசுமை எரிசக்தி, நிதி தொழில் நுட்பம் மட்டுமல்லாது அவருடைய வருகையால் எரிசக்தி ஒத்துழைப்பில் சிறப்பான முன்னேற்றம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கும் இடையேயான ஒருங்கிணைந்த பொருளாதார பங்களிப்பு ஒப்பந்த பேச்சுவார்த்தையை விரைவாக முடிக்க வேண்டியதன் அவசியத்தை கனடா பிரதமர் வலியுறுத்தியதாகவும் திரு குமரன் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் நாட்டின் தளவாட போக்குவரத்து செலவினத்தை 10 சதவீதத்திற்கும் குறைவாக கட்டுப்படுத்த அரசு திட்டமிட்டு இருப்பதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

மத்திய தானியக் கிடங்கு கழகத்தின் 70-வது ஆண்டு தினத்தை ஒட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில்

பேசிய அவர், நாட்டின் வளர்ச்சியில் தளவாட போக்குவரத்து தொழில் முக்கிய பங்கு வகிப்பதாக தெரிவித்தார்.

இந்திய தானிய கிடங்கு சந்தையானது ஆண்டுக்கு 15 சதவீதம் அளவுக்கு வளர்ச்சியடைந்து, வரும் 2027 ஆம் ஆண்டுக்குள் சுமார் 32 லட்சம் கோடி ரூபாயை எட்டும் என்று அவர் கூறினார்.

மின்னணு சந்தை, திட்டமிடப்பட்ட சில்லறை விற்பனை, ரயில்வே கட்டமைப்பின் விரைவான விரிவாக்கத்தின் மூலம் இந்த வளர்ச்சி எட்டப்படும் என்று திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

ஜனநாயக பாரம்பரியத்தையும் சிறுபான்மையினரின் உரிமைகளையும் பாதுகாப்பதில் இந்திய மக்களின் துடிப்பான செயல்பாடு பாராட்டுக்குரியது என்று ஐநா மனித உரிமைகளுக்கான தூதர் திரு. Volker Turk தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் கவுன்சில் மாநாடு தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாகிஸ்தான் மற்றும் சீனாவில் நிலவும் மனித உரிமைகள் கவலை அளிக்கக்கூடியதாக உள்ளது என்று தெரிவித்தார்.

அண்மையில் தாம் இந்தியா சென்றிருந்தபோது மக்களிடையே காணப்பட்ட துடிப்புமிக்க செயல்பாடுகளால் கவரப்பட்டதாக அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தானில் மனித உரிமைகள் தொடர்பான வழக்கறிஞர்கள் இருவருக்கு 17 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ள திரு Volker Turk, சீனாவிலும் அடிப்படை உரிமைகளை நசுக்கும் போக்கு காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

ஈரானின் உச்சபட்ச தலைவர் அலி காமெனி, கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து காஷ்மீரில் அனைத்து மாவட்டங்களிலும் பரவலான போராட்டங்கள் நடைபெற்றதால் அங்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதனால் ஜம்மு காஷ்மீரில் இன்று மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. காஷ்மீர் பள்ளத்தாக்கில் அமைதியான சூழலை உறுதி செய்வதுடன் சட்டம்-ஒழுங்கை பராமரிக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் இகன்று நாளையும் மூடப்படுவதாக யூனியன் பிரதேச அரசு அறிவித்துள்ளது.

**காஷ்மீர் பல்கலைக்கழகம், இஸ்லாமிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைலக்கழகங்களில் இன்று நடைபெற இருந்த தேர்வுகள் மறு அறிவிப்பு வரும் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.**

**பதற்றம் நிறைந்த பகுதிகளில் கூடுதலாக காவல் துறையினரும், துணை ராணுவப் படையினரும் பணியமர்த்தப்பட்டு பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.**

**பாதுகாப்பு படையினர் தொடர் ரோந்து பணியிலும் ஈடுபட்டுள்ளனர்.**

**ஸ்ரீநகர் உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் பாதசாரிகளும் வாகனங்களும் உரிய சோதனைக்கு பின்னரே அனுமதிக்கப் படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

<<<<<<>>>>>>

**ருவாண்டா வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Oliver J P Nduhungirehe, இன்று புதுதில்லி வந்தடைந்தார்.**

**11-வது ரெய்சினா பேச்சுவார்த்தை மற்றும் இரண்டாவது இந்தியா- ருவாண்டா கூட்டு ஆணைய கூட்டத்தில் அவர் பங்கேற்க இருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

<<<<<<>>>>>>

**Dusseldorf சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டி இன்று தொடங்கியது.**

**இந்தியாவின் சார்பில் Harmeet Desai, Yashaswini Ghorpade உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.**

**---------------**

**நெதர்லாந்து சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Shaina Manimuthu வெண்கலப்பதக்கம் வென்றார்.**

**மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.**

**-------------**

**Kalaburagi சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sandeepthi Singh Rao பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.**

**<<<<<<END>>>>>>**